KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.26

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

ஆர். அபிலாஷின் ‘கால்கள்’ புதினத்தில் மாற்றுத்திறனாளிப் பெண்ணின் வாழ்வியல்: சமூக விலக்கல், அணுகல்தன்மைத் தடைகள் மற்றும் உளவியல் போராட்டங்கள் — ஒரு மாற்றுத்திறனியல் ஆய்வு

The Lived Experience of a Disabled Woman in R. Abhilash's Novel Kaalgal: Social Exclusion, Accessibility Barriers, and Psychological Struggles — a Disability Studies Analysis

D. MUTHURAMYA[1,*iD], Dr. N.M.KAVITHA[2iD]

[1] Research Scholar (Full-time),Tamil Department, Vellalar college for women (Autonomous), Thindal, Erode - 12.

[2] Assistant Professor, Tamil Department, Vellalar College For Women(Autonomous),Thindal, Erode.

***Corresponding author:** D. MUTHURAMYA, d.muthuramya_phd@vcw.ac.in

ORCID iD: D. MUTHURAMYA https://orcid.org/0009-0001-6266-2208 · Dr. N.M.KAVITHA https://orcid.org/0009-0005-9683-3860

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 12 October 2026
Accepted: 15 October 2026

Article ID
KIJTS-2026-0021

Peer review
Double-blind peer review

Keywords
Kaalgal novel
R. Abhilash
Disability Studies
social model
social exclusion
accessibility
overprotection
feminist disability studies
autonomy
right to life.

ABSTRACT

R. Abhilash's novel Kaalgal (Legs, Uyirmmai, 2012) centers on the lived experiences of Madhu, a young woman affected by polio, literary demonstrating that disability is not merely a deficit residing within the body, but a social experience constructed collectively by the family, society, and structural frameworks. Recipient of the Sahitya Akademi Yuva Puraskar in 2014 and the Bhasha Parishad Award in 2016, this novel is analyzed in this paper within the theoretical framework of Disability Studies. Using the medical model, social model, human rights model of disability, and feminist disability theory as its conceptual foundations, this study analyzes four dimensions reflected in Madhu's life: (1) overprotection by the family and parental guilt; (2) society’s perspective of pity, sympathy, and exclusion; (3) accessibility barriers in the home, public spaces, transportation, and education; and (4) psychological struggles related to isolation, self-worth, body image, and the desire for self-determination. The central hypothesis of this study is that physical impairment alone does not define a person's life; rather, it is the prevailing societal barriers and marginalization that restrict their opportunities. The paper aims to establish that the novel calls into question the 'disabled vs. non-disabled' binary and serves as a literary testament shifting the paradigm from a pity-based approach to a rights-based framework.

© 2026 The Author(s) · CC BY 4.0 · OPEN ACCESS

How to cite this article: D. MUTHURAMYA, & Dr. N.M.KAVITHA (2026). ஆர். அபிலாஷின் 'கால்கள்' புதினத்தில் மாற்றுத்திறனாளிப் பெண்ணின் வாழ்வியல்: சமூக விலக்கல், அணுகல்தன்மைத் தடைகள் மற்றும் உளவியல் போராட்டங்கள் — ஒரு மாற்றுத்திறனியல் ஆய்வு. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 333–343.
https://doi.org/10.63300/kijts603112026.26
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வாளர்

தெ.முத்துரம்யா,

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,தமிழ்த்துறை

வேளாளர் மகளிர் கல்லூரி, (தன்னாட்சி), திண்டல், ஈரோடு – 12.

d.muthuramya_phd@vcw.ac.in

ORCID iD: 0009-0001-6266-2208

நெறியாளர்

முனைவர் ந.மு.கவிதா,

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

வேளாளர் மகளிர் கல்லூரி(தன்னாட்சி), திண்டல், ஈரோடு.

smpkavitha@gmail.com

Orcid id : 0009-0005-9683-3860

ஆய்வுச் சுருக்கம்

ஆர். அபிலாஷின் 'கால்கள்' (உயிர்மை, 2012) புதினம், போலியோவால் பாதிக்கப்பட்ட இளம் பெண் மதுவின் வாழ்வியல் அனுபவங்களை மையமாகக் கொண்டு, மாற்றுத்திறன் என்பது உடலில் மட்டும் குடியிருக்கும் ஒரு குறைபாடு அல்ல; குடும்பம், சமூகம், கட்டமைப்பு ஆகியவை சேர்ந்து உருவாக்கும் ஒரு சமூக அனுபவம் என்பதை இலக்கிய வழியில் முன்வைக்கிறது. 2014ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி யுவ புரஸ்கார் விருதும் 2016இல் பாஷா பரிஷத் விருதும் பெற்ற இப்புதினத்தை மாற்றுத்திறனியல் (Disability Studies) கோட்பாட்டுச் சட்டகத்தில் இக்கட்டுரை ஆராய்கிறது.

மாற்றுத்திறனின் மருத்துவ மாதிரி, சமூக மாதிரி, மனித உரிமை மாதிரி, பெண்ணிய மாற்றுத்திறனியல் சிந்தனை ஆகியவற்றை ஆய்வின் கோட்பாட்டு அடிப்படைகளாகக் கொண்டு, மதுவின் வாழ்வில் வெளிப்படும் நான்கு தளங்கள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன: (1) குடும்பத்தின் அதீத பாதுகாப்பும் பெற்றோரின் குற்றவுணர்வும்; (2) சமூகத்தின் இரக்க, பரிதாப, புறக்கணிப்புப் பார்வை; (3) வீடு, பொதுவெளி, போக்குவரத்து, கல்வி ஆகிய இடங்களில் உள்ள அணுகல்தன்மைத் தடைகள்; (4) தனிமை, சுயமதிப்பு, உடல் பிம்பம், சுயநிர்ணய விருப்பம் சார்ந்த உளவியல் போராட்டங்கள்.

உடல் சார்ந்த குறைபாடு மட்டுமே ஒருவருடைய வாழ்க்கையை வரையறுக்கவில்லை; சமூகத்தில் நிலவும் தடைகளும் புறக்கணிப்புகளுமே அவருடைய வாய்ப்புகளைக் கட்டுப்படுத்துகின்றன என்பதே ஆய்வின் மையக் கருதுகோள். 'ஊனம் × ஊனமற்றவர்' என்ற இருமையைப் புதினம் கேள்விக்குள்ளாக்குகிறது என்றும், இரக்கம் சார்ந்த அணுகுமுறையிலிருந்து உரிமை சார்ந்த அணுகுமுறைக்கு நகரும் ஒரு இலக்கியச் சாட்சியமாக அது விளங்குகிறது என்றும் இக்கட்டுரை நிறுவ முனைகிறது.

திறவுச் சொற்கள்: கால்கள் புதினம், ஆர். அபிலாஷ், மாற்றுத்திறனியல், சமூக மாதிரி, சமூக விலக்கல், அணுகல்தன்மை, அதீத பாதுகாப்பு, பெண்ணிய மாற்றுத்திறனியல், தன்னாட்சி, வாழ்வுரிமை.

Abstract:

R. Abhilash's novel *Kaalgal* (*Legs*, Uyirmmai, 2012) centers on the lived experiences of Madhu, a young woman affected by polio, literary demonstrating that disability is not merely a deficit residing within the body, but a social experience constructed collectively by the family, society, and structural frameworks. Recipient of the Sahitya Akademi Yuva Puraskar in 2014 and the Bhasha Parishad Award in 2016, this novel is analyzed in this paper within the theoretical framework of Disability Studies.

Using the medical model, social model, human rights model of disability, and feminist disability theory as its conceptual foundations, this study analyzes four dimensions reflected in Madhu's life: (1) overprotection by the family and parental guilt; (2) society's perspective of pity, sympathy, and exclusion; (3) accessibility barriers in the home, public spaces, transportation, and education; and (4) psychological struggles related to isolation, self-worth, body image, and the desire for self-determination.

The central hypothesis of this study is that physical impairment alone does not define a person's life; rather, it is the prevailing societal barriers and marginalization that restrict their opportunities. The paper aims to establish that the novel calls into question the 'disabled vs. non-disabled' binary and serves as a literary testament shifting the paradigm from a pity-based approach to a rights-based framework.

Keywords:

Kaalgal novel, R. Abhilash, Disability Studies, social model, social exclusion, accessibility, overprotection, feminist disability studies, autonomy, right to life.

1. முன்னுரை

தமிழ் நவீன இலக்கியத்தில் மாற்றுத்திறனாளிகள் நீண்டகாலமாகக் கதையின் விளிம்பிலேயே நிறுத்தப்பட்டு வந்துள்ளனர். பல படைப்புகளில் அவர்கள் இரக்கத்தைத் தூண்டும் துணைப் பாத்திரங்களாகவோ, விதியின் கொடுமையைக் காட்டும் குறியீடுகளாகவோ, அல்லது 'குறையை மீறி வென்றவர்' என்ற ஊக்கக் கதையின் நாயகர்களாகவோ மட்டுமே இடம்பெற்றனர். மாற்றுத்திறனாளியின் அகவுலகை, அவருடைய ஆசைகள், உடல் சார்ந்த அனுபவங்கள், குடும்ப உறவுகளின்

சிக்கல்கள், சமூகத்துடனான அன்றாட உரசல்கள் ஆகியவற்றை மையப்படுத்தி எழுதப்பட்ட நெடும் புனைவுகள் தமிழில் அரிதானவை.

இப்பின்னணியில் ஆர். அபிலாஷின் முதல் நாவலான 'கால்கள்' குறிப்பிடத்தக்கதொரு வரவாகும். 2012 ஜனவரியில் உயிர்மை பதிப்பகம் வெளியிட்ட இந்த நாவல், போலியோவால் ஒரு கால் பாதிக்கப்பட்ட மது என்ற இளம் பெண்ணை மையப் பாத்திரமாகக் கொண்டது. இப்புதினம் 2014ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி யுவ புரஸ்கார் விருதையும், 2016இல் பாஷா பரிஷத் விருதையும் பெற்றது. இப்புதினம் 'இயலாமை' பற்றிப் பேசவில்லை; மாறாக வலிகளாலும் உடலின் வாதைகளாலும் உருவாகும் ஒரு மாற்று உலகைப் பற்றிப் பேசுகிறது மாற்றுத்திறன் என்பது உடலின் குறைபாடா, அல்லது அந்த உடலைச் சுற்றியுள்ள சமூகம் உருவாக்கும் தடைகளின் விளைவா? இக்கேள்வியை மையமாகக் கொண்டு, மதுவின் வாழ்வியலைச் சமூக விலக்கல், அணுகல்தன்மைத் தடைகள், உளவியல் போராட்டங்கள் ஆகிய மூன்று அச்சுகளில் இக்கட்டுரை ஆராய்கிறது.

2. மாற்றுத்திறனியல் ஆய்வு: கோட்பாட்டு அடித்தளம்

மாற்றுத்திறனியல் (Disability Studies) என்பது 1970களுக்குப் பின் மேற்குலகில் உருவாகி, இன்று பன்முகத் துறையாக வளர்ந்துள்ள ஒரு அறிவுப்புலமாகும். மாற்றுத்திறனை மருத்துவச் சிக்கலாக மட்டுமே பார்க்காமல், அதிகாரம், பண்பாடு, மொழி, கட்டமைப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய சமூக-அரசியல் நிகழ்வாக அணுக வேண்டும். அதற்காக இக்கட்டுரை பின்வரும் நான்கு மாதிரிகளைப் பயன்படுத்துகிறது.

2.1 மருத்துவ மாதிரி (Medical Model)

மருத்துவ மாதிரி மாற்றுத்திறனைத் தனிமனித உடலில் உள்ள 'குறைபாடு' அல்லது 'நோய்' என வரையறுக்கிறது. சிக்கல் உடலில் இருக்கிறது; தீர்வு சிகிச்சை, சீர்செய்தல், இயல்புநிலைக்குத் திருப்புதல் ஆகியவற்றில் இருக்கிறது என்பது இதன் அடிப்படை. இந்த மாதிரியில் மாற்றுத்திறனாளி 'நோயாளி'யாகவும், மருத்துவர், குடும்பம், சமூகம் ஆகியோர் அவருக்காக முடிவெடுப்பவர்களாகவும் அமைகின்றனர்.

2.2 சமூக மாதிரி (Social Model)

சமூக மாதிரி என்பது மைக்கேல் ஆலிவர் (Michael Oliver, 1990) என்பவரால் கோட்பாட்டு வடிவம் பெற்றது. இது 'குறைபாடு' (impairment) என்பதையும் 'மாற்றுத்திறன் (disability) என்பதையும் பிரித்துக் காட்டுகிறது. கால் பலவீனம் ஒரு குறைபாடு; ஆனால் படிக்கட்டு மட்டுமே உள்ள கல்லூரி, சாய்தளம் இல்லாத பேருந்து, 'இவளுக்கு எதற்குப் படிப்பு?' என்ற சமூக மனப்பான்மை ஆகியவையே அவரை 'முடக்குகின்றன'. எனவே தீர்வு உடலைச் சீர்செய்வதில் அல்ல, சமூகத்தைச் சீர்செய்வதில் உள்ளது என்பதைப் பேசுகிறது சமூக மாதிரி.

2.3 மனித உரிமை மாதிரி (Human Rights Model)

ஐக்கிய நாடுகளின் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் உடன்படிக்கை (UNCRPD, 2006) இம்மாதிரியின் அடித்தளம். மாற்றுத்திறனாளிகள் இரக்கத்துக்குரிய பயனாளிகள் அல்ல; கண்ணியம், தன்னாட்சி, சுதந்திரமாக வாழும் உரிமை, சமூகப் பங்கேற்பு ஆகியவற்றுக்கு உரிமையுடைய முழு மனிதர்கள் என்பதை இது வலியுறுத்துகிறது. இந்தியாவில் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016 (RPwD Act) இவ்வுடன்படிக்கையின் அடிப்படையில் இயற்றப்பட்டது.

2.4 பெண்ணிய மாற்றுத்திறனியல் (Feminist Disability Studies)

திருமணம், தாய்மை, அழகு ஆகிய பாலின எதிர்பார்ப்புகள் அவளை எவ்வாறு இரட்டை விலக்கலுக்கு உள்ளாக்குகின்றன என்பதை இச்சிந்தனை வெளிச்சமிடுகிறது. இந்தியச் சூழலில் அனிதா காய் (Anita Ghai, 2003) மாற்றுத்திறனாளிப் பெண்களின் அனுபவத்தை 'உடலற்ற உருவம்' ((Dis)Embodied Form) என விளக்குகிறார்.

2.5 ஆய்வு நோக்கங்கள்

1. 'கால்கள்' புதினத்தில் மாற்றுத்திறனாளிப் பெண்ணின் வாழ்வியல் அனுபவங்களை அடையாளம் காணுதல்.
2. மாற்றுத்திறனாளிகள் மீதான சமூகப் பார்வை மற்றும் புறக்கணிப்பு நடைமுறைகளை ஆராய்தல்.
3. குடும்ப அமைப்பில் உருவாகும் அதீத பாதுகாப்பு மற்றும் தன்னாட்சி தொடர்பான முரண்பாடுகளை விளக்குதல்.
4. அணுகல்தன்மைத் தடைகளுக்கும் சமத்துவ வாய்ப்புகளுக்கும் இடையிலான தொடர்பைப் பகுப்பாய்வு செய்தல்.
5. பாலினம், மாற்றுத்திறன், உளவியல் அனுபவங்கள் ஆகியவற்றின் பரஸ்பரத் தொடர்பை ஆராய்தல்.
6. மாற்றுத்திறனாளிகளின் சுயமரியாதை மற்றும் வாழ்வுரிமை குறித்த இலக்கியப் பங்களிப்பை மதிப்பிடுதல்.

ஆய்வு அணுகுமுறை

1. சமூகவியல் ஆய்வு அணுகுமுறை
2. மாற்றுத்திறனியல் ஆய்வு அணுகுமுறை
3. பெண்ணிய ஆய்வு அணுகுமுறை



Fig 1: 'கால்கள்' நாவலில் மாற்றுத்திறனியல் ஆய்வு

ஆர். அபிலாஷின் 'கால்கள்' நாவலை மையமாகக் கொண்டு, மாற்றுத்திறனாளிகளின் அகவுலகம் மற்றும் சமூகச் சிக்கல்களை மருத்துவ, சமூக, மனித உரிமை மற்றும் பெண்ணிய மாற்றுத்திறனியல் மாதிரிகளின் அடிப்படையில் இக்கட்டுரை ஆராய்கிறது. சமூக விலக்கல், அணுகல்தன்மைத் தடைகள் மற்றும் உளவியல் போராட்டங்களை மையமாகக் கொண்ட இதன் ஆய்வு நோக்கங்கள் மற்றும் அணுகுமுறைகளை இப்படம் விளக்குகிறது.

3. 'கால்கள்' புதினத்தில் மாற்றுத்திறனாளிப் பெண்ணின் வாழ்வியல்

மதுவின் வாழ்க்கை உடலுடன் தொடர்ந்து உரையாடிக்கொண்டே தன்னை அறிய முயலும் ஒரு பெண்ணின் கதை. குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட போலியோ அவளுடைய ஒரு காலைச் சூம்பச் செய்கிறது. அந்தக் கால் அவளுடைய நடையை மட்டுமல்ல, வீட்டார் அவளைப் பார்க்கும் விதத்தையும், ஊரார் அவளை அளக்கும் விதத்தையும், அவள் தன்னைத் தானே மதிப்பிடும் விதத்தையும் தீர்மானிக்கும் ஒரு மையப் புள்ளியாக மாறுகிறது.

3.1 உடலுடனான உரையாடல்

மது அவளது காலைத் தன் உடலின் ஒரு பகுதியாக எண்ணுவது மட்டுமன்றி, தன்னுடன் எப்போதும் கூடவே வரும், தனக்குப் பயன்படாத ஒரு மௌன சாட்சியாக, இன்னொரு ஆளாகப் பார்க்கிறாள் என்று ஆசிரியர் விளக்குகிறார். இந்த இருமை, மருத்துவ மாதிரி உருவாக்கும் 'உடல் × குறைபாடு' என்ற பிளவின் உளவியல் வெளிப்பாடாக வாசிக்கத்தக்கது. சமூகம் அவளுடைய காலையே அவளாகப் பார்க்கும்போது, அவள் அந்தக் காலைத் தன்னிடமிருந்து பிரித்து 'மற்றவராக்க' முயல்கிறாள். **"காலே காலை**

குணப்படுத்தும்அதை அதிகம் நோவாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்”[1] (கால்கள் ப.எ – 147)

3.2 அன்றாட வாழ்க்கையின் நுண்ணனுபவங்கள்

மாற்றுத்திறனாளியின் வாழ்க்கை பெரிய துயர நிகழ்வுகளால் மட்டும் ஆனதல்ல; ஒவ்வொரு நாளும் எதிர்கொள்ளும் சிறு சிறு உரசல்களால் ஆனது. நடக்கும் தூரத்தைக் கணக்கிடுவது, மற்றவர்களின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாத சங்கடம், உதவி கேட்க வேண்டிய நிலையின் அவமானம், உதவி கேட்காமலேயே திணிக்கப்படும் ‘உதவி’யின் எரிச்சல் ஆகியவை மதுவின் அன்றாடத்தின் பகுதிகளாகும்.

3.3 விருப்பங்களும் எதிர்பார்ப்புகளும்

மது ஒரு ‘மாற்றுத்திறனாளி’ மட்டுமல்ல; கல்வி, நட்பு, காதல், சுதந்திரமான நடமாட்டம், சொந்த முடிவுகள் ஆகியவற்றை விரும்பும் ஓர் இளம் பெண். அவளுடைய ஆசைகள் அவளுடைய வயதுப் பெண்களின் ஆசைகளிலிருந்து வேறுபட்டவை அல்ல. வேறுபாடு, அந்த ஆசைகளை அடைவதற்கு அவள் முன் சமூகமும் குடும்பமும் எழுப்பும் கூடுதல் சுவர்களில் மட்டுமே உள்ளது. சமூக மாதிரியின் மொழியில் சொன்னால், அவளுடைய குறைபாடு (impairment) மாறாதது; ஆனால் அவளுடைய முடக்கம் (disability) சூழலுக்கேற்ப ஏறி இறங்குகிறது.

3.4 சுய அடையாளம்

புதினம் மதுவைச் சுற்றி மற்ற உடல் வேறுபாடுகள் கொண்ட பாத்திரங்களையும் நிறுத்துகிறது: திடீரெனப் பக்கவாதத்தால் தளர்ந்துபோகும் ஒரு விளையாட்டு வீரன், மனவளர்ச்சிக் குறைபாடு உள்ள ஒரு பெண், தான் சமைப்பதைத் தானே உண்ண விரும்பாமல் உறங்கிக் கழிக்கும் மிகப் பருமனான ஒரு பெண். இவர்கள் சார்பாக மது ‘இயல்பான உடல்’ கொண்டவர்களுடன் உரையாடுகிறாள்; இதன் வழியாகத் தன் பாதையைக் கண்டடைகிறாள்.

இந்தப் பல்குரல் அமைப்பு முக்கியமானது. மாற்றுத்திறன் என்பது ஒற்றை அனுபவம் அல்ல, பல வடிவங்கள் கொண்ட ஒரு நிறமாலை என்பதை அது உணர்த்துகிறது. ஒரு காலத்தில் ‘முழு உடல்’ கொண்டிருந்து பின் இழந்த விளையாட்டு வீரனும், பிறப்பிலிருந்தே வேறுபட்ட உடலுடன் வாழும் மதுவும் ‘இயல்பு’ என்பது எவ்வளவு நிலையற்ற ஒன்று என்பதைக் காட்டுகின்றனர். மாற்றுத்திறனியலாளர்கள் சொல்வதுபோல, ‘இயல்பான உடல் கொண்டவர்’ என்பவர் ‘இன்னும் மாற்றுத்திறனாளி ஆகாதவர்’ (temporarily able-bodied) மட்டுமே.



Fig 2: ‘கால்கள்’ புதினத்தில் மாற்றுத்திறனாளிப் பெண்ணின் வாழ்வியல்

இப்படம் 'கால்கள்' நாவல் நாயகி மதுவின் உடலுடனான உரையாடல், அன்றாட வாழ்க்கைத் துயரங்கள், கல்வி மற்றும் சுதந்திரம் சார்ந்த விருப்பங்கள் மற்றும் மாற்றுத்திறனின் பல்புகழ் தன்மையை விவரிக்கிறது. 'இயல்பு' என்பது நிலையற்றது என்பதையும், சமூகச் சுவர்கள் உருவாக்கும் தடைகளையும் இது தெளிவாக எடுத்துரைக்கிறது.

4. மாற்றுத்திறனாளிகள் மீதான சமூகப் பார்வையும் புறக்கணிப்பும்

மதுவின் வாழ்க்கையை மிக அதிகமாகக் கட்டுப்படுத்துவது அவளுடைய கால் அல்ல; அந்தக் காலைப் பார்க்கும் சமூகத்தின் கண்கள். இந்தப் பார்வை மூன்று வடிவங்களில் வெளிப்படுகிறது: இரக்கம், பரிதாபம், சார்புநிலை எதிர்பார்ப்பு.

4.1 இரக்கம் என்ற ஒடுக்குமுறை

தமிழ்ச் சமூகத்தில் ‘பாவம்’ என்ற சொல் மாற்றுத்திறனாளிகளை நோக்கி அடிக்கடி சொல்லப்படுகிறது. மேலோட்டமாக அது அன்பின் வெளிப்பாடாகத் தோன்றினாலும், அதன் அடியில் ஒரு படிநிலை ஒளிந்திருக்கிறது: இரக்கம் காட்டுபவர் மேலே, இரக்கம் பெறுபவர் கீழே. இரக்கம் ஒருவரைச் சமமானவராக அல்ல, உதவிக்குரியவராக நிலைநிறுத்துகிறது. மதுவைச் சுற்றியுள்ள உறவினர்களும் அயலாரும் வெளிப்படுத்தும் ‘அய்யோ பாவம்’ மனப்பான்மை, அவளுடைய ஆற்றல்களைக் கண்ணுக்குத் தெரியாமல் ஆக்கி, அவளுடைய குறைபாட்டை மட்டுமே முன்னிறுத்துகிறது.

4.2 சமூகத்தின் பார்வை

மது பொதுவெளியில் நுழையும்போதெல்லாம் இந்தப் பார்வைகளைச் சுமந்தே செல்கிறாள். அவளுடைய நடை, அவளுடைய சாய்வு, அவளுடைய வேகம் ஆகியவை எல்லாம் மற்றவர்களின் கண்களுக்கு உட்பட்டவை. ஆனால் புதினம் இந்தப் பார்வையை ஒருவழிப் பாதையாக விடவில்லை. மது பதிலுக்கு 'இயல்பான உடல்' கொண்டவர்களையே உற்றுப் பார்க்கிறாள், அவர்களுடைய பதற்றங்களையும் போலித்தனங்களையும் அடையாளம் காண்கிறாள்..

4.3 எதிர்பார்ப்பும் வாய்ப்பு மறுப்பும்

மாற்றுத்திறனாளியிடம் எதிர்பார்ப்பது சார்ந்திருத்தல். சுயமாக முடிவெடுப்பவர், சுயமாகப் பயணிப்பவர், சுயமாகச் சம்பாதிப்பவர் என்ற உருவங்களை சமூகம் மாற்றுத்திறனாளிக்கு வழங்குவதில்லை. இதன் விளைவு வாய்ப்பு மறுப்பாகும்: கல்வியில் 'இவளால் முடியுமா?' என்ற சந்தேகம், வேலையில் 'இவளுக்கு ஏற்றது எது?' என்ற குறுக்கல், உறவுகளில் 'இவளை யார் மணப்பார்?' என்ற கவலை இவையெல்லாம் சமூகத்தின் குறுகிய பார்வை ஆகும்.

மதுவின் கால் அவளைக் கல்லூரிக்கோ வேலைக்கோ போகவிடாமல் தடுக்கவில்லை; அவளால் முடியாது என்று முன்கூட்டியே தீர்மானிக்கும் சமூகமே அவளைத் தடுக்கிறது. உடல் சார்ந்த குறைபாடு ஒரு யதார்த்தம்; ஆனால் அதன் மீது சமூகம் கட்டியெழுப்பும் எதிர்பார்ப்புகளே அதை ஒரு வாழ்நாள் தண்டனையாக்குகின்றன. கால்களின் கேள்விகள் என்ற புத்தகத்தில் ஆர். அபிலாஷ் மாற்றுத்திறனாளிகள் மீதான சமூக எண்ணத்தை, **"ஊனமுற்றவர்கள் சமூகத்துக்குத் தேவையில்லாதவர்கள் என்கிற ஒரு தவறான எண்ணம் நம் சமூக மனதில் உள்ளது..... உடல்தான் மனிதனின் அடிப்படை மூலதனம் என்று நம்புகிறோம். அதனால் உடல் குறைபாடு உள்ளவரை அரை மனிதராகவே நினைக்கிறோம்."[2] (கால்களின் கேள்விகள் ப.எ – 69)** என்று பதிவு செய்கிறார்.

4.4 சமூக ஏற்றுக்கொள்ளலின் இடைவெளி

சமூகம் மாற்றுத்திறனாளிகளை 'பொறுத்துக்கொள்கிறது' (tolerates); ஆனால் 'ஏற்றுக்கொள்வதில்லை' (accepts). பொறுத்துக்கொள்ளல் என்பது ஓரத்தில் இருக்க அனுமதிப்பது; ஏற்றுக்கொள்ளல் என்பது மையத்தில் இடம் தருவது. மதுவின் போராட்டம் இந்த இடைவெளியைக் கடப்பதற்கான போராட்டம். அவளுக்கு வேண்டியது அனுதாபம் அல்ல, சமமான இடம்.



Fig 3: ‘கால்கள்’ புதினத்தில் சமூகப் பார்வையும் புறக்கணிப்பும்

இப்படம் இரக்கம் என்னும் ஒடுக்குமுறை, பொதுவெளியில் சமூகத்தின் கண்கள், வாய்ப்பு மறுப்புகள் மற்றும் சமூக ஏற்றுக்கொள்ளலின் இடைவெளி ஆகியவற்றை விளக்குகிறது. சமுதாயத்தின் குறுகிய எதிர்பார்ப்புகள் மற்றும் அனுதாபத்தைத் தாண்டி மாற்றுத்திறனாளிகளுக்குச் சமமான இடம் தேவை என்பதை இது தெளிவாக எடுத்துரைக்கிறது.

5. அணுகல்தன்மைச் சிக்கல்களும் கட்டமைப்புச் சார்ந்த தடைகளும்

அணுகல்தன்மை (accessibility) என்பது சமூக மாதிரியின் மிகத் தெளிவான நடைமுறை வெளிப்பாடு. ஒரு கட்டடம், ஒரு பேருந்து, ஒரு பாடத்திட்டம் யாருடைய உடலை மனதில் கொண்டு வடிவமைக்கப்படுகிறதோ, அந்த உடலுக்கு வெளியே உள்ள அனைவரும் அந்த இடத்திலிருந்து விலக்கப்படுகின்றனர். மதுவின் வாழ்க்கையில் இந்த விலக்கல் நான்கு வெளிகளில் நிகழ்கிறது.

வெளி	தடையின் வடிவம்	மாற்றுத்திறனியல் வாசிப்பு
வீடு	உயர்ந்த வாசற்படிகள், வழுக்கும் தரை, கழிப்பறை அமைப்பு; ‘உள்ளேயே இரு’ என்ற குடும்ப விதி	பாதுகாப்பு என்ற பெயரில் வீடே ஒரு மென்சிறையாகிறது
பொதுவெளி	சீரற்ற சாலைகள், நடைபாதையின்மை,	உடலியல் தடையும் உளவியல் தடையும்

வெளி	தடையின் வடிவம்	மாற்றுத்திறனியல் வாசிப்பு
	கூட்ட நெரிசல், பிறரின் பார்வை	ஒன்றையொன்று வலுப்படுத்துகின்றன
போக்குவரத்து	உயரமான பேருந்துப் படிகள், அவசர ஏற்றம்-இறக்கம், சொந்த வாகனமின்மை	நடமாட்டச் சுதந்திரம் மறுக்கப்படுவது, வாய்ப்புகள் அனைத்தையும் மறுப்பதாகிறது
கல்வி நிறுவனம்	மாடி வகுப்பறைகள், சாய்தளமின்மை, ஆசிரியர்களின் குறைந்த எதிர்பார்ப்பு	கட்டடமும் மனப்பான்மையும் சேர்ந்து கல்வியைத் 'தகுதி' சார்ந்ததாக்குகின்றன

5.1 வீடு: பாதுகாப்பான சிறை

வீடு மாற்றுத்திறனாளிக்கு மிகப் பாதுகாப்பான இடமாகக் கருதப்படுகிறது. ஆனால் அதுவே அவளை வெளியுலகிலிருந்து பிரிக்கும் சுவராகவும் மாறுகிறது. மது வெளியே செல்ல ஒவ்வொரு முறையும் அனுமதி, துணை, காரணம் தேவைப்படுகிறது. வீட்டின் கட்டமைப்பு அவளுக்கு ஏற்றதாக மாற்றப்படுவதற்குப் பதிலாக, அவளே வீட்டின் கட்டமைப்புக்கு ஏற்பத் தன்னைச் சுருக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

5.2 பொதுவெளியும் போக்குவரத்தும்

நகர்ப்புற, சிறுநகர இந்தியாவின் பொதுவெளிகள் 'சராசரி உடலை' மனதில் கொண்டே அமைக்கப்பட்டுள்ளன. நடைபாதையில் கடைகள், சாலையில் குழிகள், பேருந்தின் முதல் படி தரையிலிருந்து ஓர் அடிக்கும் மேல் உயரம் என ஒவ்வொன்றும் மதுவைப் போன்றவர்களுக்கு ஒரு சிறு போர்க்களம். நடமாட்டச் சுதந்திரம் என்பது வெறும் பயண வசதி அல்ல; அதுவே கல்வி, வேலை, நட்பு, சமூகப் பங்கேற்பு அனைத்துக்குமான வாசல். அந்த வாசல் அடைக்கப்படும்போது, மற்ற எல்லா உரிமைகளும் ஏட்டளவிலேயே நின்றுவிடுகின்றன.

பேருந்துப் பயணம் குறித்து கால்களின் கேள்விகள் நூலில், "**இந்தப் பேருந்துகள் விசித்திரமாக அமைக்கப்பட்டவை – பெரிய உயரமான படிக்கட்டுகளைக் கொண்டவை. என்னால் ஒரு எட்டில் ஒரு படிக்கட்டில் ஏற முடியாது நான் பெரும்பாலும் உட்கார்ந்து உட்கார்ந்து ஊர்ந்து தான் ஏற வேண்டும்."[3] (கால்களின் கேள்விகள் – ப.எ 27)** இதிலிருந்து மாற்றுத்திறனாளிகளின் சிரமங்களை அறியமுடிகிறது.

இந்திய மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016இன் பிரிவுகள் 40–46 பொதுக் கட்டடங்கள், போக்குவரத்து, தகவல் தொடர்பு ஆகியவற்றில் அணுகல்தன்மையைக் கட்டாயமாக்குகின்றன. **"உரிய அரசும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளும் அனைத்து கட்டிடங்கள் மற்றும் அத்தியாவசிய தேவைகள் வழங்கும் இடங்கள் குறிப்பாக ஆரம்ப நலவாழ்வு நிலையம், பொதுமருத்துவமனை, பள்ளிகள், பேருந்து நிறுத்தம், இரயில் நிலையம் ஆகியவைகளில் அணுகுவதற்கு ஏற்றவாறு செயல்திட்டம் வகுத்து முன்னுரிமை அடிப்படையில் வெளியிடுதல்"[4] (இந்திய மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம் 45.2 ப. எ - 59)**

'கால்கள்' வெளியான 2012இல் இச்சட்டம் நடைமுறைக்கு வரவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அவ்வகையில், சட்டம் வருவதற்கு முன்னரே, அது தீர்க்க முயலும் சிக்கல்களை இலக்கியம் பதிவு செய்துள்ளது.

5.3 கல்வி நிறுவனங்கள்

கல்வி மாற்றுத்திறனாளிக்கு விடுதலையின் முதன்மை வழி. ஆனால் கல்வி நிறுவனங்களே பல நேரங்களில் விலக்கலின் தளமாகின்றன. மாடிப்படிகள் மட்டுமே உள்ள வகுப்பறைகள், விளையாட்டு, நிகழ்ச்சிகள், பயணங்கள் ஆகியவற்றிலிருந்து 'உன் நல்லதுக்காக' விலக்கி வைக்கப்படுதல், ஆசிரியர்களின் குறைந்த எதிர்பார்ப்பு ஆகியவை கட்டடம் சார்ந்த தடைகளையும் மனப்பான்மை சார்ந்த தடைகளையும் இணைக்கின்றன.




Fig 4: இலக்கியமும் அணுகல்தன்மையும்

இப்படம் தமிழ் இலக்கியங்களில் மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் கட்டமைப்புத் தடைகளையும் வாழ்விடச் சிக்கல்களையும் விளக்குகிறது. வீடு, பொதுவெளி, போக்குவரத்து மற்றும் கல்வி நிலையங்களில் உள்ள அணுகல்தன்மைச்

சவால்கள் மற்றும் சமூக மாதிரியின் அடிப்படையிலான தீர்வுகள் ஆகியவற்றை இது தெளிவாக எடுத்துரைக்கிறது.

6. குடும்பச் சூழலும் மாற்றுத்திறனாளிகளின் உரிமையும்

'கால்கள்' புதினத்தின் மிக ஆழமான முரண், அன்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் இடையிலானது. மதுவின் குடும்பம் அவளை நேசிக்கிறது; அதே அன்பு அவளைச் சிறைப்படுத்துகிறது. இந்த முரணின் மையத்தில் பெற்றோரின் குற்றவுணர்வு இருக்கிறது.

6.1 பெற்றோரின் குற்றவுணர்வு

தன் மகளின் ஊனத்துக்குத் தாங்களே காரணம் என்ற உணர்வு மதுவின் பெற்றோரை ஆட்டிப்படைக்கிறது. தடுப்பூசி தவறியதோ, கவனம் குறைந்ததோ, விதியோ, முன்வினையோ எதுவாயினும் அந்தக் 'குற்றம்' அவர்களுடையது என்று அவர்கள் நம்புகின்றனர். குறிப்பாகத் தந்தையின் குற்றவுணர்வு, மகளைத் தொடர்ந்து ஒரு குழந்தையாகவே அணுகும் போக்காக வெளிப்படுகிறது. **"ஆமா பின்னே இவளை நினைத்து அழுது அழுது தானே பிரேமேந்திரன் குடிகாரனாயிப் போனான்."[5] (கால்கள் ப.எ - 18)** மது இந்தக் குற்றவுணர்வை எதிர்கொண்டு, அது அபத்தமானது என்று தத்துவ, அறிவியல் ரீதியாகப் புரிந்துகொள்கிறாள்; அதுவே அவளை விடுவிக்கிறது என்று ஆசிரியர் தன் நேர்காணலில் குறிப்பிடுகிறார். இது புதினத்தின் உச்சப் புள்ளிகளில் ஒன்று. பெற்றோரின் குற்றவுணர்வு, மருத்துவ மாதிரியின் ஒரு குடும்ப வடிவம்: 'குறை' உடலில் இருக்கிறது, அதற்கு யாரோ பொறுப்பு, அந்தப் பொறுப்பை ஈடுசெய்ய வேண்டும். அடைய கால் ஒரு வைரஸின் விளைவு, ஒரு உயிரியல் நிகழ்வு; அது யாருடைய பாவமும் அல்ல, யாருடைய தண்டனையும் அல்ல.

6.2 அதீத பாதுகாப்பு

குற்றவுணர்வின் நேரடி விளைவு அதீத பாதுகாப்பு (overprotection). 'விழுந்துவிடுவாள்', 'யாராவது ஏதாவது சொல்வார்கள்', 'ஏமாற்றப்படுவாள்' என்ற அச்சங்களின் பெயரால், மதுவின் ஒவ்வொரு நகர்வும் கண்காணிக்கப்படுகிறது, தடுக்கப்படுகிறது அல்லது துணையுடன் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. அதீத பாதுகாப்பின் முரண் என்னவென்றால், அது பாதுகாக்க நினைக்கும் நபரையே பலவீனப்படுத்துகிறது. ஆபத்தை எதிர்கொள்ளும் அனுபவம் மறுக்கப்படும்போது, ஆபத்தைக் கையாளும் திறனும் மறுக்கப்படுகிறது.

மாற்றுத்திறனியலாளர்கள் இதை 'கற்றுக்கொண்ட சார்புநிலை' (learned dependency) என்கின்றனர். மாற்றுத்திறனாளி இயல்பாகவே சார்ந்திருப்பவர் அல்ல; அவரைச் சுற்றியுள்ளவர்கள் அவருக்குச் சார்ந்திருக்கக் கற்றுத் தருகின்றனர்.

6.3 நிரந்தரக் குழந்தைமை

பன்னிரெண்டு வயசுப் பிள்ளையா இருக்கறச்சே தோளில போட்டு சொமந்து பள்ளிக்கூடம் கொண்டு போவானே"[6] – (கால்கள் ப.எ - 18)

மாற்றுத்திறனாளிகள், குறிப்பாக மாற்றுத்திறனாளிப் பெண்கள், வயதுக்கு வந்த பின்னரும் 'குழந்தை' நிலையிலேயே வைக்கப்படுவது பரவலான நிகழ்வு. அவர்களுடைய பாலியல் விருப்பங்கள், காதல், சுய முடிவுகள், தனிமைக்கான தேவை ஆகியவை மறுக்கப்படுகின்றன அல்லது கண்டுகொள்ளப்படுவதில்லை. மதுவின் தந்தை அவளை வளர்ந்த பெண்ணாக அன்றி, என்றென்றும் காக்கப்பட வேண்டிய சிறுமியாகவே பார்க்கிறார். இந்த நிரந்தரக் குழந்தைமை (infantilization) அவளுடைய தன்னாட்சியின் மிகப் பெரிய எதிரி.

6.4 அன்பும் உரிமையும்

புதினம் குடும்பத்தை வில்லனாக்கவில்லை என்பது அதன் நுட்பம். பெற்றோரின் அன்பு உண்மையானது, அவர்களுடைய அச்சங்கள் புரிந்துகொள்ளக் கூடியவை. ஆனால் அன்பு மட்டுமே போதாது; அது உரிமையை மதிக்கும் அன்பாக மாற வேண்டும். 'நான் உன்னைக் காப்பேன்' என்பதிலிருந்து 'நீ உன்னைக் காத்துக்கொள்ள நான் உதவுவேன்' என்பதற்கு நகர வேண்டும். ஆனால் மதுவின் குடும்பமோ அவளைப் பற்றிய கவலையிலேயே இருக்கிறது. அவளது தாய் தந்தை இருவருமே அப்படியான மனநிலையில் தான் உள்ளனர்.

"எங்காலம் வரை நான் பாடுபட்டு பாத்துப்பேன் அக்கா. அது களிஞ்சு நான் இல்லாதப்ப அவள் என்ன பாடு படுவான்னு நினைச்சாதான் வேதனையா இருக்குது. அம்மா பெருமூச்சு விட்டாள்."[7] (கால்கள் ப.எ – 150) ஆனால் மது இத்தைகய குறை சொல்லல் மற்றும் குற்ற உணர்விலிருந்து வெளி வருகிறாள்

UNCRPD பிரிவு 19 வலியுறுத்தும் 'சுதந்திரமாக வாழும் உரிமை' (right to live independently) குடும்பத்துக்குள்ளிருந்தே தொடங்க வேண்டும் என்கிறது.



Fig 5: 'கால்கள்' புதினத்தில் குடும்பச் சூழலும் உரிமைகளும்

‘கால்கள்’ புதினத்தில் மாற்றுத்திறனாளிப் பெண் மதுவின் குடும்பம் அவளது ஊனத்துக்கான குற்றவுணர்வாலும், அதீதப் பாதுகாப்பாலும் அவளைக் குழந்தையாகவே நடத்துகிறது. இத்தகைய நிரந்தரக் குழந்தைமை மற்றும் அன்பின் பெயரிலான கட்டுப்பாடுகள் அவளது சுதந்திரமான வாழ்வுரிமைக்கும் தன்னாட்சிக்கும் எவ்வாறு முரணாக அமைகின்றன என்பதை இப்படம் விளக்குகிறது.

7. மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் உளவியல் சிக்கல்கள்

சமூக விலக்கலும் கட்டமைப்புத் தடைகளும் இறுதியில் மனதுக்குள் இறங்குகின்றன. ‘கால்கள்’ புதினத்தின் பெரும்பகுதி மதுவின் அகவுலகில் நிகழ்கிறது. வெளியுலகின் அழுத்தங்கள் அவளுடைய எண்ணங்களாக, கனவுகளாக, தன்னுடனான உரையாடல்களாக மாறுவதை ஆசிரியர் நுட்பமாகப் பதிவு செய்கிறார்.

7.1 தனிமை

மதுவின் தனிமை உடல் சார்ந்தது மட்டுமல்ல. மற்றவர்களுடன் ஓட, விளையாட, பயணிக்க முடியாததால் ஏற்படும் புறத் தனிமையும், தன் அனுபவத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளக் கூடியவர் யாருமில்லை என்ற அகத் தனிமையும் இணைகின்றன. குடும்பத்தின் அக்கறை கூட இந்தத் தனிமையைக் குறைப்பதில்லை; ஏனெனில் அந்த அக்கறை அவளைப் புரிந்துகொள்வதிலிருந்து அல்ல, அவளைப் பற்றிய அச்சத்திலிருந்து பிறக்கிறது.

7.2 நிராகரிப்பு அச்சம்

ஒவ்வொரு புதிய சந்திப்பும் மதுவுக்கு ஒரு சோதனை: இவர் என் காலைத்தான் முதலில் பார்ப்பாரா? என்னை ஒரு மனுஷியாக ஏற்பாரா, அல்லது இரக்கத்துக்குரியவளாக மட்டுமே பார்ப்பாரா? இந்த நிராகரிப்பு அச்சம், உறவுகளுக்குள் நுழையும் முன்னரே அவளைப் பின்வாங்கச் செய்கிறது.

7.3 சுயமதிப்பும் உடல் பிம்பமும்

சமூகத்தின் அழகுக் கருத்தியல் ‘சீரான’, ‘சமச்சீரான’, ‘வேகமான’ உடலைக் கொண்டாடுகிறது. அந்த அளவுகோலுக்கு வெளியே உள்ள உடல் கொண்ட பெண், தன்னைத் தானே அந்த அளவுகோலால் அளக்கக் கற்றுக்கொள்கிறாள். இதுவே உள்வாங்கப்பட்ட ஊன ஒடுக்குமுறை (internalized ableism). மது தன் காலுடன் நடத்தும் உரையாடல்கள், இந்த உள்வாங்கலுக்கும் அதை மறுக்கும் முயற்சிக்கும் இடையிலான போராட்டத்தின் பதிவுகள் ஆகும்.

7.4 உணர்ச்சிப் போராட்டங்கள்

கோபம், ஏக்கம், பொறாமை, குற்றவுணர்வு, அவமானம் ஆகிய உணர்ச்சிகள் மதுவின் மனதில் மாறி மாறி எழுகின்றன. குறிப்பிடத்தக்கது என்னவென்றால், புதினம் இந்த உணர்ச்சிகளை ‘நல்ல மாற்றுத்திறனாளி’ என்ற ஒழுக்கச் சட்டகத்துக்குள் அடைக்கவில்லை. மது எப்போதும் பொறுமையானவளாகவோ,

நன்றியுள்ளவளாகவோ, ஊக்கமளிப்பவளாகவோ இல்லை. அவள் கோபப்படுகிறாள், எரிச்சலடைகிறாள், கேள்வி கேட்கிறாள். இந்த முழுமையான மனிதத்தன்மையே அவளை ஒரு 'குறியீடாக' அன்றி ஒரு 'மனுஷியாக' ஆக்குகிறது.

7.5 தன்னம்பிக்கையும் சுயநிர்ணயமும்

புதினத்தின் உளவியல் பயணம் விரக்தியில் முடியவில்லை. பெற்றோரின் குற்றவுணர்வின் அபத்தத்தைப் புரிந்துகொள்வதும், மற்ற மாற்றுத்திறனாளிப் பாத்திரங்களின் சார்பாக 'இயல்பான' உலகுடன் உரையாடுவதும் மதுவுக்குத் தன் பாதையைக் கண்டடையும் தெளிவைத் தருகின்றன. இந்தத் தெளிவு ஒரு 'அதிசய மீட்சி' அல்ல. கால் மாறவில்லை; மதுவின் பார்வை மாறுகிறது. சிக்கல் தன் உடலில் அல்ல, தன்னைச் சுற்றியுள்ள அர்த்தக் கட்டமைப்புகளில் உள்ளது என்ற அறிதலே அவளுடைய விடுதலையாகும்.

இது சமூக மாதிரியின் உளவியல் பரிமாணம். 'நான் குறைபாடுடையவள்' என்பதிலிருந்து 'என்னைக் குறைபாடுடையவளாக்கும் சமூகம் இருக்கிறது' என்ற நகர்வு, சுயமதிப்பின் மறுகட்டமைப்புக்கு அடிப்படையாகிறது.




Fig 6: 'கால்கள்' புதினத்தில் மாற்றுத்திறனாளிப் பெண்ணின் உளவியல் சிக்கல்கள்

இப்படம் தனிமை, நிராகரிப்பு அச்சம், உள்வாங்கப்பட்ட ஊன ஒடுக்குமுறை மற்றும் உணர்ச்சிப் போராட்டங்களை ஆராய்கிறது. சிக்கல் தன் உடலில் அல்ல, தன்னைச் சுற்றியுள்ள கட்டமைப்பு மற்றும் அர்த்தங்களில் உள்ளது என்ற தெளிவே அவளது உளவியல் விடுதலைக்கும் சுயநிர்ணயத்துக்கும் அடிப்படையாக அமைகிறது என்பதை இது அழகாக விளக்குகிறது.

8. மாற்றுத்திறனும் பாலினமும்: இரட்டை ஒடுக்குமுறை

மது ஒரு மாற்றுத்திறனாளி மட்டுமல்ல, ஒரு பெண். இவ்விரு அடையாளங்களும் இணையும் புள்ளியில் உருவாகும் ஒடுக்குமுறை, அவ்விரண்டின் கூட்டுத்தொகையை விடக் கடுமையானது. கிம்பர்லே க்ரென்ஷா (Kimberlé Crenshaw, 1989) முன்வைத்த 'இடைவெட்டு' (intersectionality) கருத்தாக்கம் இந்த அனுபவத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

8.1 பெண்ணுக்கான சமூக எதிர்பார்ப்புகள்

தமிழ்ச் சமூகம் பெண்ணிடம் எதிர்பார்க்கும் பாத்திரங்கள்: அழகான மகள், அடக்கமான மணப்பெண், திறமையான இல்லத்தரசி, தியாகமுள்ள தாய். இவை அனைத்தும் ஒரு குறிப்பிட்ட வகை உடலை முன்னூகிக்கின்றன. மாற்றுத்திறனாளிப் பெண் இந்தப் பாத்திரங்களுக்கு 'தகுதியற்றவளாக' முன்கூட்டியே தீர்மானிக்கப்படுகிறாள். அதே சமயம், பெண்ணுக்கு மறுக்கப்படும் சுதந்திரங்கள் (தனியாகப் பயணித்தல், வேலைக்குச் செல்லுதல், சுயமாக முடிவெடுத்தல்) மாற்றுத்திறனாளிப் பெண்ணுக்கு இரட்டிப்பாக மறுக்கப்படுகின்றன.

8.2 உடல் மீதான அதிகாரம்

பெண்ணின் உடல் எப்போதும் குடும்பம், சமூகம், மரபு ஆகியவற்றின் கண்காணிப்புக்கு உட்பட்டது. மாற்றுத்திறனாளிப் பெண்ணின் உடல் கூடுதலாக மருத்துவத்தின் கண்காணிப்புக்கும் உட்படுகிறது. அவளுடைய உடல் எப்போதும் 'பார்க்கப்படுகிறது', 'பரிசோதிக்கப்படுகிறது', 'பேசப்படுகிறது'; ஆனால் அந்த உடலின் உரிமையாளரான அவளுடைய குரல் அரிதாகவே கேட்கப்படுகிறது. மது தன் காலுடன் உரையாடுவது, இந்த உடலை மற்றவர்களிடமிருந்து மீட்டெடுத்துத் தன்னுடையதாக்கும் முயற்சியாகவும் வாசிக்கத்தக்கது.

8.3 காதல், திருமணம், பாலியல் உரிமை

மாற்றுத்திறனாளிப் பெண்ணின் காதலும் பாலியல் விருப்பமும் சமூகத்தால் ஒன்று மறுக்கப்படுகின்றன அல்லது கேலிக்குள்ளாக்கப்படுகின்றன. 'இவளை யார் கட்டுவார்கள்?' என்ற கேள்வி குடும்பத்தின் கவலையாக ஒலிக்கும்போது, அதன் அடியில் 'இவள் விரும்பப்படத் தகுதியற்றவள்' என்ற தீர்ப்பு மறைந்திருக்கிறது. மறுபுறம், திருமணம் நடந்தாலும் அது பெரும்பாலும் 'சமரசம்' அல்லது 'தியாகம்' என்ற பார்வையிலேயே பார்க்கப்படுகிறது.

புதினம் மதுவின் ஆசைகளை மறுக்கவோ மறைக்கவோ இல்லை. அவள் விரும்புகிறாள், ஏங்குகிறாள், எதிர்பார்க்கிறாள். இந்த ஆசைகளுக்கு இலக்கியத்தில் இடம் தருவதே ஒரு அரசியல் செயல்; ஏனெனில் மாற்றுத்திறனாளிப் பெண்ணை ஆசையற்றவளாக, உடலற்றவளாகச் சித்திரிப்பதே மரபான இலக்கியப் போக்காக உள்ளது.

8.4 தன்னிச்சையான தேர்வுகள்

கல்வி, வேலை, உறவு, வாழிடம் என எதைப் பற்றியும் மதுவுக்கு முழுமையான தேர்வுச் சுதந்திரம் இல்லை. ஒவ்வொரு தேர்விலும் 'நீ பெண்' என்ற கட்டுப்பாடும் 'நீ ஊனமுற்றவள்' என்ற கட்டுப்பாடும் ஒருசேர அழுத்துகின்றன. கால்கள் புதினத்தில் மதுவுக்கு என்ன வேலை சரியாக வரும், அவள் எப்படியான உடை அணிய வேண்டும், எப்படியான வண்டி ஓட்ட வேண்டும் என்பதையெல்லாம் அவளைச் சூழ்ந்துள்ள மனிதர்களே முன்முடிவு எடுத்துக் கொள்கின்றனர் அவள் தன்னிச்சையாகச் செயல்படுதல் என்பது குறைவாகவே உள்ளது.

"மதுவுக்கு என்ன விதமான வேலைகள் தோதுபடும் என்று அவர்கள் யோசித்தனர். யாரும் தீர்க்கமாக ஒன்றும் தோன்றவில்லை உட்கார்ந்து பார்க்கிற மாதிரி வேலை தான் சரிப்படும் என்று பொதுவாக தீர்மானித்தனர்."[8] (கால்கள் - ப.எ 149 – 150)

அனிதா காய் இந்தியச் சூழலில் சுட்டுவதுபோல, மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கான விடுதலை என்பது பெண்ணிய இயக்கமும் மாற்றுத்திறனாளிகள் இயக்கமும் இணைந்து சிந்திக்கும்போதுதான் சாத்தியம். 'கால்கள்' இந்த இணைப்புச் சிந்தனைக்கு ஒரு இலக்கியத் தளத்தை அமைத்துத் தருகிறது.



Fig 7: 'கால்கள்' புதினத்தில் மாற்றுத்திறனும் பாலினமும்: இரட்டை ஒடுக்குமுறை

இப்படம் மாற்றுத்திறனாளிப் பெண்ணின் மீது சமூகம் திணிக்கும் இரட்டை ஒடுக்குமுறைகளை விளக்குகிறது. பெண்ணுக்கான எதிர்பார்ப்புகள், உடல் மீதான கண்காணிப்பு, காதல் மற்றும் திருமண மறுப்பு, மற்றும் தன்னிச்சையான தேர்வுகள் மீதான கட்டுப்பாடுகள் ஆகியவற்றை இது தெளிவாக எடுத்துரைக்கிறது.

9. மாற்றுத்திறனாளிகளின் சமத்துவ வாழ்வுரிமையும் சமூக உள்ளடக்கமும்

'கால்கள்' புதினத்தின் இலக்கிய வாசிப்பு, ஒரு பரந்த சமூகக் கேள்விக்கு இட்டுச் செல்கிறது: மதுவைப் போன்றவர்கள் முழுமையான, கண்ணியமான, சுதந்திரமான வாழ்க்கை வாழ சமூகம் என்ன செய்ய வேண்டும்? புதினத்தின் சித்திரிப்புகளை மாற்றுத்திறனியல் கோட்பாடுகளுடன் இணைக்கும்போது ஐந்து அடிப்படைத் தேவைகள் வெளிப்படுகின்றன.

9.1 அணுகல்தன்மை

அணுகல்தன்மை ஒரு சலுகை அல்ல; அது மற்ற எல்லா உரிமைகளுக்குமான முன்நிபந்தனை. சாய்தளம், மின்தூக்கி, தாழ்தளப் பேருந்து, அணுகக்கூடிய கழிப்பறை ஆகியவை இல்லாதபோது, கல்வி உரிமையும் வேலை உரிமையும் வெறும் காகித வாக்குறுதிகளாகிவிடுகின்றன. 'உலகளாவிய வடிவமைப்பு' (universal design) என்ற கருத்து, முதியவர், கர்ப்பிணி, குழந்தையுடன் செல்லும் பெற்றோர் என அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் வெளிகளை வடிவமைக்கக் கோருகிறது. மதுவுக்கான அணுகல்தன்மை, இறுதியில் அனைவருக்குமான அணுகல்தன்மையாகவே உள்ளது.

வீட்டில் வேறு எந்த இடத்தை காட்டிலும் கழிவறையை பயன்படுத்துவது அவளுக்கு மிகவும் சவாலாக இருக்கும் பொது வெளியில் கூட இதே மாதிரியான பிரச்சனைகளை தான் ஒவ்வொரு மாற்றுத்திறனாளிகளும் எதிர்கொள்கின்றனர். **"கழிப்பறை தரை ஈரமாக இருந்தது. ஈரமான தரையில் உருண்டு சென்று அமர்வது அவளுக்கு ஒவ்வாமை உண்டு தரை ஈரமற்று இருக்க வேண்டும் என்று ஒவ்வொரு முறையும் பிரார்த்தித்துக் கொள்வாள்."[9] (கால்கள் ப.எ – 294)**

9.2 கல்வி

உள்ளடக்கக் கல்வி (inclusive education) என்பது மாற்றுத்திறனாளிகளைத் தனிப் பள்ளிகளில் பிரித்து வைப்பதல்ல; பொதுப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் அனைவருக்கும் ஏற்றவையாக மாற்றுவது. மதுவின் கல்விப் பயணத்தில் வெளிப்படும் தடைகள், கட்டடச் சீரமைப்போடு ஆசிரியர் பயிற்சி, மனப்பான்மை மாற்றம், எதிர்பார்ப்பின் மறுவரையறை ஆகியவையும் அவசியம் என்பதைக் காட்டுகின்றன.

9.3 தனிநபர் சுதந்திரம்

சுதந்திரம் என்பது 'எல்லாவற்றையும் தானே செய்வது' அல்ல. சுதந்திர வாழ்க்கை இயக்கம் (Independent Living Movement) வலியுறுத்துவதுபோல, சுதந்திரம் என்பது தன் வாழ்க்கையைப் பற்றிய முடிவுகளைத் தானே எடுக்கும் உரிமை, தேவைப்படும் உதவியை எப்போது, எவ்வாறு, யாரிடமிருந்து பெறுவது என்பதைத் தானே தீர்மானிக்கும் உரிமை. மதுவுக்கு மறுக்கப்படுவது உதவி அல்ல; உதவியின் மீதான கட்டுப்பாடு.

9.4 சுயமரியாதை

சுயமரியாதை தனிமனித மன உறுதியால் மட்டும் கட்டப்படுவதில்லை; அது சமூக அங்கீகாரத்தால் வளர்க்கப்படுகிறது அல்லது சிதைக்கப்படுகிறது. 'பாவம்' என்ற ஒவ்வொரு சொல்லும், 'உன்னால் முடியாது' என்ற ஒவ்வொரு தீர்ப்பும் சுயமரியாதையை அரிக்கின்றன. பெரியார் வலியுறுத்திய சுயமரியாதைக் கருத்தியல், சாதி, பாலின ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மட்டுமின்றி, உடல் சார்ந்த படிநிலைகளுக்கு எதிராகவும் விரிவாக்கப்பட வேண்டியது என்பதை இப்புதினம் மறைமுகமாக நினைவூட்டுகிறது.

9.5 சமூகப் பங்கேற்பு

உள்ளடக்கம் (inclusion) என்பது ஒருவரை அறைக்குள் அனுமதிப்பது மட்டுமல்ல; அந்த அறையின் விதிகளை வகுப்பதில் அவருக்கும் பங்கு தருவது. மாற்றுத்திறனாளிகள் இயக்கத்தின் முழக்கம் 'எங்களைப் பற்றி, எங்களை இல்லாமல் எதுவும் வேண்டாம்' (Nothing about us without us) என்பது. இலக்கியத்திலும் இது பொருந்தும்: மாற்றுத்திறனாளிகளின் கதைகள் அவர்களுடைய பார்வையிலிருந்து, அவர்களுடைய குரலில் சொல்லப்பட வேண்டும். 'கால்கள்' மதுவின் பார்வைக்கு முதன்மை தருவதன் மூலம் இத்திசையில் ஒரு முக்கியமான அடியை எடுத்து வைக்கிறது.

9.6 இலக்கியத்தின் பங்கு

சட்டங்கள் உரிமைகளை வரையறுக்கின்றன; ஆனால் இலக்கியம் அந்த உரிமைகள் மறுக்கப்படும் அனுபவத்தை உணர வைக்கிறது. ஒரு சாய்தளம் இல்லாத படிக்கட்டு எவ்வளவு அவமானகரமானது, ஒரு 'பாவம்' எவ்வளவு காயப்படுத்துவது என்பதைப் புள்ளிவிவரங்கள் சொல்ல முடியாது; புதினங்கள் சொல்ல முடியும். அவ்வகையில் 'கால்கள்' மாற்றுத்திறனாளிகள் உரிமை விவாதத்தில் ஒரு பண்பாட்டுச் சான்றாவணமாகப் பங்களிக்கிறது. இதனை ஆசிரியர் அபிலாஷ் வரிகளின் மூலம் அறியலாம்.

"மாற்றுத்திறனாளி அல்லாத பொதுமக்களை நோக்கி எளிமையாக உரையாட முயலும் வெகுஜன நூலாகும். மற்றமையைப் புரிந்து கொள்ளுதல் என்பதே சிந்தனை மரபின் முக்கிய நோக்கம். மற்றமையாக தம்மை மாற்றிக் கொள்ளுதலே ஒரு உன்னதமான ஆன்மீகப் பயிற்சி. நவீன உலகில் மாற்றுத்திறனாளிகளே முதன்மையான மற்றமை என்பதால் இது பொதுமக்கள் ஒவ்வொருவரும் படித்திருக்க வேண்டிய வீட்டில் வைத்திருக்க வேண்டிய நூலாகிறது"[10]. (கால்களின் கேள்விகள் - அட்டைப்பக்கம்)




Fig 8: ‘கால்கள்’ புதினத்தில் மாற்றுத்திறனும் பாலினமும்: இரட்டை ஒடுக்குமுறை

இப்படம் மாற்றுத்திறனாளிப் பெண்ணின் மீது சமூகம் திணிக்கும் இரட்டை ஒடுக்குமுறைகளை விளக்குகிறது. பெண்ணுக்கான எதிர்பார்ப்புகள், உடல் மீதான கண்காணிப்பு, காதல் மற்றும் திருமண மறுப்பு, மற்றும் தன்னிச்சையான தேர்வுகள் மீதான கட்டுப்பாடுகள் ஆகியவற்றை இது தெளிவாக எடுத்துரைக்கிறது.

10. முடிவுரை

ஆர். அபிலாஷின் ‘கால்கள்’ புதினம், மாற்றுத்திறன் என்பது உடலில் தொடங்கி உடலிலேயே முடிவடையும் ஒரு குறைபாடு அல்ல, மாறாகக் குடும்பம், சமூகம், கட்டமைப்பு ஆகியவற்றால் தொடர்ந்து உருவாக்கப்படும் ஒரு சமூக அனுபவம் என்பதை இலக்கிய வழியில் நிறுவுகிறது. இவ்வாய்வின் முடிவுகள் பின்வருமாறு:

1. **உடல் அல்ல, சமூகமே முடக்குகிறது.** மதுவின் போலியோ கால் ஒரு மாறாத உடல் யதார்த்தம். ஆனால் அவளுடைய கல்வி, நடமாட்டம், உறவுகள், சுய முடிவுகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவது அந்தக் கால் அல்ல; சமூகத்தின் இரக்கப் பார்வையும், அணுகல்தன்மையற்ற கட்டமைப்புகளும், குடும்பத்தின் அச்சங்களுமே. இது ஆய்வின் மையக் கருதுகோளை உறுதிப்படுத்துகிறது.
   வீடு, பொதுவெளி, போக்குவரத்து, கல்வி நிறுவனம் ஆகியவற்றின் கட்டமைப்புத் தடைகள் வெறும் உடலியல் இடையூறுகள் அல்ல; அவை தனிமையாக, நிராகரிப்பு அச்சமாக, தாழ்ந்த சுயமதிப்பாக மனதுக்குள் குடியேறுகின்றன.
2. **மாற்றுத்திறனாளிப் பெண் இரட்டை ஒடுக்குமுறைக்கு உள்ளாகிறாள்.** பாலினமும் மாற்றுத்திறனும் இணையும் புள்ளியில், மது பாரம்பரியப் பெண் பாத்திரங்களிலிருந்தும் நவீன சுதந்திரங்களிலிருந்தும் ஒருசேர விலக்கப்படுகிறாள். அவளுடைய உடலும் ஆசைகளும் மற்றவர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்படுகின்றன.

'கால்கள்' வாசகரிடம் ஒரு கேள்வியை விட்டுச் செல்கிறது: மதுவின் காலை 'சரிசெய்ய' முடியாது; ஆனால் அவளைச் சுற்றியுள்ள உலகைச் சரிசெய்ய முடியுமா? அந்தக் கேள்விக்கான பதில், சமூகத்தின் கைகளில் இருக்கிறது.

துணைநூற்பட்டியல்

- அபிலாஷ், ஆர். (2012). *கால்கள்*. சென்னை: உயிர்மை பதிப்பகம்.
- அபிலாஷ், ஆர். (நவம்பர் 2022) கால்களின் கேள்விகள் சென்னை: உயிர்மை பதிப்பகம்
- அபிலாஷ், ஆர். (2014, நவம்பர் 1). உயிரெழுத்து பேட்டி – பகுதி 4. *ஆர். அபிலாஷின் இணையதளம்*.
- ஆர். அபிலாஷ். *தமிழ் விக்கிப்பீடியா*. (இமையம் எழுதிய 'கால்கள்' விமர்சனத்துக்கான இணைப்பு இதில் உள்ளது.)

சட்ட ஆவணங்கள்

- United Nations. (2006). *Convention on the Rights of Persons with Disabilities* (UNCRPD).
- இந்திய அரசு. (2016). *மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016* (The Rights of Persons with Disabilities Act, 2016).